பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 06 திங்கட்கிழமை 22.07.2024 கதிர் 257

## இன நலனை முன்னிறுத்தும்

# தேர்தல் கூட்டு அற்ற கூட்டமைப்பை மீள உருவாக்க ஒன்றிணைவோம்

### தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சிறீதரன் எம்.பி அழைப்பு

எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்து சிந்திப்பதோடு, தமிழ்த்தேசியத் தளத்தில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்ததனித்துவங்களைப்பேணியவாறு,தேர்தல்கூட்டாகஅன்றிதேசத்தின் கூட்டாக, கூட்டமைப்பை மீள உருவாக்குவதற்குதமிழ்த்தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன்அழைப்பு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் தேசிய பேரவையை உருவாக்குவது தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பேசும் 7 கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு இன்று கைச்சாத்தாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 6 யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உத்தியோகபூர்வக் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டிருந்தது. எனினும், தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனின் மறைவினையொட்டி ஷ்ரீபுரிந்துணர்வு உடன்பாட்டு நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டதாகக்கூறப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபோதும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலருக்கு நேரமின்மை காரணமாக அதுவும் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர் ☞ 2

## புளியங்கூடல் ஆலய திருட்டு: இளம் உதவி குருக்கள் கைது

### 40 பவுண் நகைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், புளியங்கூடல் முத்து விநாயகர் கோவில் நகைகளைத்திருடினார் என்ற குற்றச்சாட்டில் 28 வயதான உதவிக் குருக்கள் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். திருட்டுப்போன 62 பவுண் நகைகளில் அவரிடமிருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். எஞ்சிய நகைகளில் பல வங்கிகளில் அடைவு வைக் கப்பட்டிருக்கின்றன என்றும்தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் பாதுகாப்புப்பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் ☞ 8

## வங்குரோத்து நிலையிலிருந்து மீள ஏறுமதி சார் பொருளாதாரம் தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்என்றுஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கண்டி, கங்கவட்டக்கொரல மகாநாம வித்தியாலத்துக்க நேற்றையதினம் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் உபகரணங்களைவழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பார்க்கின்றபோது, வழமைபோன்று சிந்தித்து சவால்களை வெற்றிகொள்ள முடியாது. காரணம் நாம் வங்குரோத்து அடைந்த நாடாகும். இந்தி நிலையில் இருந்து நாம் எவ்வாறு மீள முடியும்.

ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொரு ளாதாரத்தினை உருவாக்குவது ☞ 8

## 22ஆவது திருத்தத்தினால் தேர்தலுக்கு பாதிப்பில்லை

### பவ்ரல் தலைவர் கருத்து

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு வராது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ராஹேன ஹெட்டிஆரச்சி தெரிவித்தார்.

அரசமைப்பின் 22ஆம் திருத்தம் தொடர்பாக நேற்று கொழும்பில் செய்தி யாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு அவரசமாக அரசமைப்பின் 22ஆம் திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளதன் மூலம் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இச்தத் திருத்தம் ☞ 2

## தேர்தல் லஞ்சத்திற்கான தண்டத்தை ரூ. 10 லட்சமாக அதிகரிக்க யோசனை

தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதத்தை 500 ரூபாவில் இருந்து ஒருமில்லியன்ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கானசட்டமூலத்தின் ஊடாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஸவின் கையொப்பத்துடன்வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதம் 200 ரூபாவில் இருந்து 750,000 ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின்போது அநாவசிய அழுத்தம் பிரயோகத்திற்கு விதிக்கப்பட்ட 500 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தேர்தலொன்றில் ஆள்மாறாட்டம் செய்யும் குற்றத்திற்காக இதுவரை 300 ரூபா மாத்திரமே அபராதமாக அறவிடப்பட்டது. இதனை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க சட்டமூலத்தில்யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கணக்குகளை தவறவிடுவோருக்கு இதுவரை விதிக்கப்பட்ட 300 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபா ☞ 8

## ரணில் தோல்வி அடைந்து அமைதியாக வீடு செல்வார்

### அனுர குமார திஸநாயக்க திட்டவட்டம்

ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். ரணில் தோல்வி அடைவார். அமைதியாக வீட்டுக்குச் செல்வார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்பேதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 8

## அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற எதிர்காலத்திற்கு இடமேயில்லை

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க தாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும், நாட்டின்நிகழ்ச்சிநிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்கவேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்கஆகியோரை இப்பயணத்தில் இணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

'ஒன்றாகவெல்வோம் - நாம் கம்பஹா' என்ற தொனிப்பொருளில் நேற்று கடவத்தை பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

மக்கள்எனக்குவழங்கிய அடிப்படையான பொறுப்பை நான் நிறைவேற்றியுள்ளேன். பொருளாதாரமும்ஆளும் தரப்பும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றேன். பதில் ஜனாதிபதியாக பதவியேற்கக் கூட அரச அலுவலகம் ஒன்று இருக்கவில்லை. எனக்கு கட்சியும் இருக்கவில்லை. எனது கட்சியில் நான் மட்டுமே நாடாளுமன்றத்தில் இருந்தேன். அதன்படி ஐக்கியதேசியகட்சியினர் என்று நம்பி ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒத்துழைப்பு கேட்டேன் ஒத்துழைக்கவில்லை டலஸ்அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி ☞ 8

## மலையக மக்களுக்கான

## 4ஆம் கட்ட வீட்டுத் திட்டம் தாமதமாக இலங்கை ஆளும் தரப்பே காரணம்

### தமது தரப்பில் தடை இல்லை என்கிறார் இந்திய தூதுவர்

மலையக மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டத்தின் நான்காம் கட்டம் இடையில் நிற்பதற்குக் காரணம், அதற்கான நிலங்களை இலங்கை ஆளும்தரப்பு இன்னமும் விடுவிக்காமையே என்றுதெரிவித்துள்ளார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா. தன்னைநேற்றுச்சந்தித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியினரிடம்அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் (ஓகஸ்ட்) கட்டி ☞ 8

## கடன்களை மீளளிப்பதையும் ஆளும் தரப்புச் செய்கின்றது

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை அரசு கடன்களைமீளச்செலுத்தி வருகின்றது. 2024 முதல் 6 மாதங்களில் மட்டும் 129 பில்லியன் ரூபாய்கடன்கள்திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2024ஆம்ஆண்டின் முதல் ஆறு மாத ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

களுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல்களைத்தொடர்ந்து இன்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருதரப்பினரும்இணங்கியுள்ளனர். தந்தை செல்வா கலையரங்கில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. கந்தரோடையில் உள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் அதன்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில்இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் ரெலோ அமைப்பின் தலைவர்நாடாளுமன்றஉறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் துளசி ஆகியோர் பங்காளிக் கட்சிகள் சார்பில் கலந்துகொண்டனர்.

.....................

தமிழ் மக்கள் கூட்டணியின் தேசியமாநாடுநேற்றுஇடம்பெற்றது. மாநாடுஎன்னவோஅவர்களதுதான் என்றாலும் அதில் 'ஸ்கோர்' பண்ணிக்கொண்டு போனவர் சிறீதரன்தான். வழக்கமாக நீதியரசர்தான் நல்ல உரைகளை எழுதி வந்து படிப்பது வழமை. ஆனால் நேற்றைய அவரது உரை சோபிக்கவில்லை. பதிலாக சிறீதரன் அந்த மேடையை நன்கு பயன்படுத்திக்கொண்டார். இன நலனுக்கா, தேர்தல் அரசியல் அல்லாத புதிய கூட்டமைப்பை உருவாக்க வருமாறு அவர் விடுத்த அழைப்பே நேற்று அனேகமாக எல்லாத் தமிழ் ஊடகங்களிலும் இடம்பெற்றது. அந்த வகையில் மேடையைச் சிறப்பாகப்பயன்படுத்திக்கொண்டவர் சிறீதரன்தான்.

தமிழ் அரசுக் கட்சியத் தலைவர் மாவை சேனாதிராசாவும் கூட்டத்திற்குஅழைக்கப்பட்டிருந்தார். கடைசி வரை அவர் மேடையில் ஏற்றப்படவில்லை. தமிழ் மக்கள் கூட்டணியின்கட்சி நிர்வாகிகளைத் தவிர சிறீதரன் மட்டுமே இருந்தார். அதனால் தானோ என்னவோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள்எவரையும்கூட்டத்தில் காணவில்லை. நேற்று அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் என்றபோதும் தமது பங்காளிக் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு வருகை தரவில்லை. தமது இணைத்தலைவர்களில்ஒருவரான விக்னேஸ்வரனின் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

இந்த நிலையில் சிறீதரனின் அழைப்புக்கு ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ஆக்கபூர்வமான எதிர்வினை, பதில்கிடைக்கும்என்று எதிர்பார்க்கவே முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரதுஉரையின்முழுவடிவம் வருமாறு

கடந்த எட்டுத்தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தமிழர்களின் சுதந்திரத்துக்காக, அவர்களின் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்காக, சிங்கள பௌத்த ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக, இரத்தமும் சதையுமாக நடைபெற்று வருகின்ற போராட்ட வலியின் நீட்சியின் உருவான, ஈழத்தமிழர்களின்சுதந்திரத்திற்கான அரசியல் இயக்கங்களில் ஒன்றாகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டுள்ள 'தமிழ் மக்கள் கூட்டணியின்' முதலாவது தேசிய மாநாட்டில் உரையாற்றக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை, காலத்தேவை கருதியவரலாற்றுச்சந்தர்ப்பங்களில் ஒன்றாகவே நான் பார்க்கிறேன்.

ஆத்மார்த்தமான அரசியற் பண்பாட்டின் அடிப்படையில், புதிய உலகச் சூழ்நிலைகளை அனுசரித்தவாறு எமது இனத்தின் சமத்துவவாழ்வுக்கானபயணத்தை நாம் எல்லோரும் இணைந்து முன்னெடுக்க வேண்டுமென்ற காலக்கடமை எம் ஒவ்வொருவரது கரங்களிலும் தரப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழினத்தின்இறையாண்மைக்கு நீதிவேண்டி நாங்கள் மேற்கொள்ளும் அறவழிப் போராட்டங்களையும், அபிலாசை வெளிப்பாடுகளையும் சிங்கள தேசம் எப்போது புரிந்துகொள்ளத் தலைப்படுகிறதோ, அப்போதுதான் அர்த்தம் மிகுந்த இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பினையும், இனவாதநோக்கில்கட்டமைக்கப்பட்ட அதிகார பீடங்களின் செயல்முறைகளையும் நாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் தெளிவுற்றுள்ள போதும், அடிப்படை விருப்புகளைக் கோருகின்ற எமது அரசியல் உரிமையின் மீது போர்தொடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை, 'தமிழ்த் தேசியம்' என்னும் ஓர் குடையின் கீழ் நின்று கூட்டாக எதிர்க்கும் திராணியை உருவாக்குவதில்தான் ஈழத்தமிழினம் இன்று பெருந் தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

எட்டு தசாப்தங்கள் கடந்தும், நீர்த்துப்போகாத அரசியல் அபிலாசைகளைக்கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின், அடிப்படை மற்றும் அரசியல் உரித்துகளை அங்கீகரித்து, அர்த்தமுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்கின்ற, பொருளாதார சுபீட்சமுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு, இலங்கை அரசு தொடர்ந்தும் தவறி வருகிறது என்பதைபிராந்தியமற்றும்சர்வதேச அரசுகள் உணர்ந்துகொள்ளும் காலமும் நேரமும் நெருங்கி வந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

இத்தகையதோர்சாதகத்தன்மை மிக்கஅரசியற்சூழமைவில்ஈழத்தமிழர்களின் குரலை, தமிழ்த்தேசியம் என்னும் இயங்குதளத்தில் நின்று கூட்டுக் குரலாக ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமானது. தமிழ்த்தேசிய அரசியலில் குறுகிய மற்றும்நீண்ட கால இலக்குகளைத் தீர்மானித்தல், சர்வதேச உறவுகளை மெய்நிலையில் வலுப்படுத்தல்,இளையதலைமுறை அரசியலாளர்களை வலுப்படுத்தல், மக்களை அரசியல் மயப்படுத்தல், மக்களின் உணர்ச்சியையும் திரட்சியையும் ஒரு புள்ளியில் சந்திக்கவைத்தல்உள்ளிட்ட அரசியற் செல்நெறிகளை செயலுருப்பெறச் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கூறிய அத்தனையையும், இனநலன் ஒன்றையே நோக்காகக் கொண்டநல்லதலைமைத்துவத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும். வினைத்திறனான தலைமைப் பண்புகளுக்குள்இவைஅனைத்தும் அடங்கும். இப்போதுநம்இனத்துக்கு இருக்கும் மிகப்பெரிய இடைவெளி ஆதர்சனத் தலைமையற்ற தன்மையே. சனத்திரட்சியை உருவாக்;கக்கூடிய, ஜனவசியம் மிக்க, மிகநேர்த்தியானதலைமைத்துவத்தை யாராலும் சரியான முறையில்கொடுக்கமுடியவில்லை. அல்லதுஅத்தகையஅணுகுமுறைகள் குறித்து சிந்திக்கவில்லை. ஆனால் அதற்கான களச்சூழலை உருவாக்க வேண்டியதுகாலப்பெரும்பணியாக எம்முன் உள்ளதை நாம் உணரத் தலைப்பட வேண்டும்.

நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களைஅழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாகுவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள்உள்ளஎதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளிஒருபொதுவானஅரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணையவேண்டும். இந்தப் புள்ளியில்தான் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும், அத்தகைய நேர்கோட்டில் இயங்கும்ஒவ்வொருகட்சிகளினதும் மரபார்ந்ததனித்துவங்களைப்பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவதுகுறித்தும், கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும், அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்புஎன்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கிறேன்.

இன்று தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுநிற்கின்றன. இங்குதான் உரிமைஅரசியலைசலுகைஅரசியல் வெல்கிறது. இந்த நிலைமையைச் சீர்செய்ய தமிழ் தேசிய அரசியல் மறுசீரமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்தவேண்டும்.

இனத்துவ அரசியலை முன்னெடுக்கும் சமநேரத்தில், தேர்தல்அரசியலையும்எதிர்கொள்ள வேண்டிய தேவை எம்மிடத்தே திணிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல்கள் என்பதில்உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - இளைய அரசியலாளர்களுக்கான பயில்களமாகவும் மாகாண சபைத் தேர்தல்கள் என்பது அறிவும் ஆற்றலும் மிக்க துறைசார் விற்பன்னர்களை பயன்கொள்ளும் களமாகவும், நாடாளுமன்றத் தேர்தல் என்பது இனத்தின்அபிலாசைகளைசர்வதேச அரங்குக்குக் கொண்டு செல்லும் விரும்பும்வாண்மைத்துவமும்மிக்க தலைவர்களுக்கான களமாகவும் அமையவேண்டும். இந்தச் சிந்தனைத் தெளிவு கட்சி ரீதியாகக் கட்டியெழுப்பப்படவேண்டும்.

இவற்றைத் தாண்டி, நிலத்தையும் புலத்தையும் நாம் உணர்ச்சிகளால்மட்டுமேபிணைத்து வைத்துள்ளோம். இது அறிவுமைய பிணைப்பாக மாறவேண்டும். இந்த விடயத்தில் உள்ள பலம் பலவீனங்களைசுயபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியகாலத்தேவை எழுந்துள்ளது. தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்கால நிலைத்திருப்பு நோக்கியும் தமிழ் இனத்தினுடைய விடுதலை வேணவாக்களை முன்கொண்டு செல்வதற்கும் நிலத்திலும் புலத்திலும், தாய்த் தமிழகத்திலும் வாழும் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஈழத்தமிழர்கள் எவ்வாறு கொள்கை வேறுபாடுகளோடும் அரசியல் சித்தாந்த வேறுபாடுகளோடும் திசைவேறாக பிரிந்திருக்கிறார்களோ அதேபோன்றதொரு பிரிவினைகள் மிகுந்த நிலைதான் புலத்திலும் வேரோடியிருக்கிறது. விடுதலை வேண்டிப் பயணிக்கும் எங்கள் இனம், தன் இலக்கை அடைந்துகொள்ளும் எதிர்காலப் பயணங்களில் இதனால் பல்வேறு நெருக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்.

ஆழமாக நோக்கினால் ஈழத் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் தன்வல்லமைகள்அத்தனையையும் இழந்து கொண்டேயிருக்கின்றது. மாறாக எதையும் பெறவில்லை. அது அரசியல் தீர்வாக இருக்கலாம். நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியாகவும் இருக்கலாம்.

கருதத்தக்க எதையும் சுதந்திரத்துக்குப் பின் எங்கள் இனம் பெறவேயில்லை. இனத்தின் விடுதலை குறித்த சிந்தனைகள் வலுக்குன்றத் தொடங்கியிருக்கும் எங்களின் இரண்டாம்தலைமுறையினரிடத்தே, எங்கள்அறப்போர் குறித்தபுரிதல்கள் குறுகியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரைஅண்மையில்சந்தித்துக் கலந்துரையாடிய இந்த நாட்டின் ஜனாதிபதி, நாற்பது வயதுக்கு உட்பட்டஇளையதலைமுறையினர் அரசியல் நாட்டமற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற கருத்தை மிக நாசூக்காக பதிவுசெய்திருந்தார்.

ஒருவகையில்பார்த்தால்அரசியற் தெளிவும்கொள்கைப்பிடிப்பும்மிக்க இளையோரை வழிப்படுத்துகின்ற, அரசியல் நெறிப்படுத்துகின்ற சமூகப் பொறுப்பிலிருந்து நாம் தவறிவருகிறோம்என்பதை உணர முடிகிறது.

ஈழத்தமிழர்கள்எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்ற கேள்வியை எங்கள் இளைய தலைமுறையை நோக்கி எழுப்பினால், நிலப்பறிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை என்கின்ற மூன்று தளநிலைகளுமே அவர்களால் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் அந்த மூன்று பிரச்சினைகளும் இனவிடுதலைப் போருக்கான களத்தைத் திறக்கவில்லை என்கின்ற பொதுப் புரிதல் இன்று எங்களிடத்தே இல்லை. பலாலி விளிம்பு முதல் பொத்துவில் வரை தமிழர்களின் மரபுவழித் தாயகமாக எங்கள் வசமிருந்தபோதேஎங்கள்இனத்தின் அறப்போர் ஆரம்பித்திருந்தது என்பதையும், மேற்சொன்ன காரணங்கள் அந்தப் போர் சார்ந்து பின்வந்த நாட்களில் வலிந்து திணிக்கப்பட்டதுணைக்காரணங்கள் தாம் என்பதையும் உணரத் தலைப்பட்டால்தான், இனவிடுதலைப் போரின் அறநிலை சார் அடுத்த களங்களை உருவாக்க முடியும்.

ஆகவே, கொள்கை ரீதியாக ஒன்றுபட்டுச்செயற்படுகின்றஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் அரவணைத்தவாறு புலம்பெயர் தேசக் கட்டமைப்புகளுடனும் இணைந்தவகையில்தமிழர்களின் தாகம் வெல்ல உழைப்பதே இங்குள்ள ஒவ்வொருவரினதும் முதன்மைக்கடமையாகும்என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்குகொண்டுவருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாசைத் தளங்களிலிருந்து தடம்புரளாது பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும்உறவுகளும்ஒருங்குசேரதம் அரசியற்பயணத்தைமுன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழி வரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தகையதோர் தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப் பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளைக் கடந்தும் ஈழத்தமிழினத்தின் அரசியல் வேட்கையைச்சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும், கடமையையும்நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவுசெய்து நிறைவுசெய்கிறேன் - என்றார்.

## கடன்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் பிணைமுறிகள் மற்றும்பிணைமுறிஉண்டியல்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மொத்த கடன், 4,852 பில்லியன் ரூபாவாக காணப்படுகின்ற நிலையில் அக்காலப்பகுதியில் 4,981 பில்லியன் ரூபாய் கடன் மீளச் செலுத்தப்பட்டுள்ளது. பெற்றுக்கொண்ட கடன்களின் பெறுமதியை காட்டிலும் 129 பில்லியன் ரூபாய் பொருளாதார முன்னேற்றத்தின் ஊடாக மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரச நிர்வாகத்தை முகாமைத்துவம்செய்துக்கொண்டு அரசமுறைகடன்கள்கட்டம்கட்டமாக செலுத்தப்படுகிறது. பொருளாதார பாதிப்புக்கு முன்னர் மத்திய வங்கியின் ஊடாக தேவையான நாணயத்தை அச்சிடும் வசதி ஆளும்தரப்புக்குக் காணப்பட்டது. இதனால்பணவீக்கம்70சதவீதமாக உயர்வடைந்தது.

புதிய மத்திய வங்கி சட்டம் இயற்றப்பட்டதால் நாணயம் அச்சிடல் வரையறுக்கப்பட்டது. இதனால்பணவீக்கம்குறைவடைந்துள்ளது. மறுபுறம்சிறந்தமறுசீரமைப்புக்களை முன்னெடுத்துள்ளதால் சாதாரண முறைமையில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது. இதனால் கடன் பெறவும், பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்தவும் முடிந்துள்ளது என்றார்.

## 22ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சர்வ ஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. என்றாலும் 22ஆம் திருத்தம் மூலம் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கோ ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வதற்கோ எந்த இடமும் இல்லை என்பதைத் தெளிவாகக் கூறமுடியும்.

சர்வஜன வாக்கெடுப்பு சட்டத்தின் பிரகாரம் சர்வஜன வாக்கெடுப்பொன்று நீதிமன்றம் ஊடாக வந்தாலும் ஜனாதிபதி அது தொடர்பான கட்டளையை தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கவேண்டும். அதேபோன்று சர்வஜன வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி கட்டளை பிறப்பித்து ஒரு மாதத்துக்கு பின்னரே சர்வஜன வாக்கெடுப்புக்கு திகதி அறிவிக்கப்படவேண்டும். அதனால் ஜனாதிபதிதேர்தலுக்குதிகதிஅறிவிக்க தேர்தல் ஆணைக்குழு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த வாரத்துக்குள்திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். செப்டம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும்.

அதனால்22ஆம்திருத்தம்இந்த காலப்பகுதியில்நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதனை அனுமதித்துக்கொள்ளஇருக்கும்கால இடைவெளியை பார்க்கும்போது, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்குச் செல்ல எந்த வாய்ப்பும் இல்லை என்பது தெளிவாகிறது. அதனால் 22ஆம் திருத்தம் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. இது தொடர்பாக மக்கள்எந்த சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

அதேநேரம் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தெளிவாக இரண்டு தடவைகள் தீர்ப்பளித்திருக்கிறது. அதனால் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள் என்பது

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# கிழக்கு ஆறுநரின் கோரிகையை ஏற்றுக் கொண்டார் ஜனாதிபதி



(ஹஸ்பர் ஏ.எச்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள நீதிமன்ற தலையீட்டால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், 1700 ரூபா சம்பளம் வழங்கும் வரை தற்காலிக தீர்வாக இடைக்கால கொடுப்பனவாக மாதாந்தம் 5000 ஷரூபா அரசாங்கம் வழங்க வேண்டுமென இ.தொ.காவ-ின் தலைவர் செந்தில் தொண்டமான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை முன்வை-த்துள்ளார். நாட்டில் கொவிட் தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் பெருந்தோட்ட மக்கள் பொருளா-தார பின்னடைவை சந்தித்து இருந்தனர். ஏனைய சமூகத்தினருக்கு 5000 ஷரூபா கொடுப்பணாவு வழங்கிய போதும் பெருந்தோட்ட மக்கள் அரச அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் வேலைக்கு செல்வதாகவும், அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி வழங்கப்படுவதாலும் அவர்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்க முடியாது எனவும் அரச அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் அப்போதைய பிரதமரின் இணைப்பு செயலாளராக இருந்த செந்தில் தொண்டமான்,இப்பிரச்சினை குறித்து அப்போதைய பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்று, 5000 வழங்குவதற்கான நியாயமான அரச ஆவணங்களை பிரதமரிடம் சமர்ப்பித்து, இந்த நிவாரண தொகையை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்க ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி செயலாளர் ஆகியோருடன் பல முறை கலந்துரையாடி மலையகம் முழுவதும் குறித்த தொகையை இடைக்கால நிவாரணமாக செந்தில் தொண்டமான் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது 1700 ரூபா சம்பளம் தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வரை இடைக்கால கொடுப்பனவாக 5000 ரூபா வழங்க மாவட்டம் வாரியாக தொழிலாளர்களின் பட்டியல், நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை, தற்காலிக தொழிலாளர்கள் எண்ணிக்கை என அனைத்து ஆவணங்களை செந்தில் தொண்டமான் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார். அதற்கமைய செந்தில் தொண்டமானின் கோரிக்கையை விரைவாக ஆய்வு செய்யுமாறு சம்பத்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் 1700 சம்பளத்தை பெறுவதற்கு தற்போது உள்ள சட்ட சிக்கல்கள் குறித்து ஜனாதிபதியிடம் செந்தில் தொண்டமான் எடுத்துரைத்ததுடன், மாற்று வழிகள் குறித்தும் கலந்துரையாடல் மேற கொண்டார். (05)

# கல்முனையின் மாண்பில் அக்கறை கொள்ளாத ஒருவனாக நான் என்றும் இருக்க மாட்டேன்

## நிஸாம் காரியப்பருக்கு ஹரீஸ் எம்.பி கடிதம்

(நூருல் ஹுதா உமர்)

கவிதை நூலுக்கும், வரலாற்றுக்கும் தொடர்புபடுத்த கூடாது என்று கருத்துக்கள் வந்தாலும் பல காவியங்கள் வரலாறாகி இருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். 'அந்த கல்முனைக்குடி நாள்கள்' எனும் உங்களின் கவிதை நூலின் தலைப்பு மாற்றப்பட வேண்டும் என கல்முனையில் தலைமை பீடமான முஹையதீன் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் உட்பட ஏனைய ஜ/ம்ஆ பள்ளிவாசல்கள், உலமா சபையினர், வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்கள் உங்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக அறிகிறேன். எனவே இந்த நூல் வெளியீட்டில் நான் கலந்து கொள்வதன் மூலம் அவர்களின் உணர்வுகளை மதிக்காத, கல்முனை மண்ணின் மாண்பில் அக்கறை கொள்ளாத ஒருவன் என்று கல்முனை மக்கள் என்னை பிழையாக எண்ணி விடுவார்கள் என தெரிவித்து ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார்.

மரியாதைக்குரிய நிஸாம் காரியப்பர் அவர்களே என்று ஆரம்பிக்கும் அந்த கடிதத்தில், உங்களின் கவிதை நூல் வெளியீட்டுக்கான அழைப்பிதழ் என்னை வந்தடைந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் எமது ஜனநாயக பேரியக்கத்தின் பொதுச்செயலாளரான, இலங்கை சட்டத்துறை ஆளுமையான, புகழ்பெற்ற ஜனாதிபதி சட்டத்தரணியான, கல்முனையின் புத்திஜீவியான உங்களின் அழைப்பை மதித்து உங்கள் நிகழ்வில் கலந்துகொள்ள நான் விருப்பம் கொண்டிருந்தேன். ஆனாலும் உங்கள் 'அந்த கல்முனைக்குடி நாள்கள்' எனும் கவிதை நூலின் தலைப்பு எனக்கு பேரதிர்ச்சியாக அமைந்துள்ளதை உங்களுக்கு தெரிவித்து கொள்வதுடன் அந்த தலைப்பில் நான் உடன்பாடற்றவனாக இருப்பதையும் அறியத்தருகிறேன்.

கல்முனை பிராந்தியத்தில் பல தசாப்தங்கள் கடந்து சர்ச்சையாக நீடித்துவரும் ஒரு விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகளாக நிலுவையில் நீடித்து வரும் சூழ்நிலையில் கல்முனை தாயின் பெருமையை இந்த தலைப்பு மழுங்கடித்து விடுமோ என்ற கவலை உங்களின் அழைப்பிதழை கண்ட நிமிடம் முதல் என்னுள் குடிகொண்டிருக்கிறது.



கவிதை நூலுக்கும், வரலாற்றுக்கும் தொடர்புபடுத்த கூடாது என்று கருத்துக்கள் வந்தாலும் பல காவியங்கள் வரலாறாகியிருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். 'அந்த கல்முனைக்குடி நாள்கள்' எனும் உங்களின் கவிதை நூலின் தலைப்பு மாற்றப்பட வேண்டும் என கல்முனையில் தலைமை பீடமான முஹையதீன் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் உட்பட ஏனைய ஜ/ம்ஆ பள்ளிவாசல்கள், உலமா சபையினர், வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்கள் உங்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக அறிகிறேன். எனவே இந்த நூல் வெளியீட்டில் நான் கலந்து கொள்வதன் மூலம் அவர்களின் உணர்வுகளை மதிக்காத, கல்முனை மண்ணின் மாண்பில் அக்கறை கொள்ளாத ஒருவன் என்று கல்முனை மக்கள் என்னை பிழையாக எண்ணி விடுவார்கள்.

உங்களின் நூல் வெளியீட்டில் கலந்து கொள்வதனூடாக கல்முனை மண்ணின் நீண்ட, நெடிய வரலாற்றையும், தொன்மையையும், புகழையும், கௌரவத்தையும் நான் கேள்விக்குட்படுத்த விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.(05)

# கல்முனையின் பெயரை திரிபுபடுத்த வேண்டாம்

## ஹக்கீம், காரியப்பருக்கு கல்முனையில் இருந்து கடிதம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை என்ற எமது ஊரினை கல்முனை குடி என்று பிரித்து வரலாற்றை திரிவுபடுத்த இடமளிக்க வேண்டாம் என கல்முனை சிவில் சமூக கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் அந்த கல்முனைக்குடி நாள்கள் ' என்ற தலைப்பில் நூல் வெளியீடு தொடர்பில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் தெரிவித்தவை வருமாறு -

சனிக்கிழமை ஜூலை 20, 2024 ஆம் திகதி 'அந்த கல்முனைக்குடி நாள்கள் ' என்ற தலைப்பில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளரும், கல்முனை மாநகர முன்னாள் மேயருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் எழுதிய கவிதைத் தொகுப்பு புத்தகம் ஒன்றை வெளியிட இருப்பதாக கல்முனையின் பூர்வீக குடிகளாகிய நாங்கள் அறிகின்றோம். மேலும், கல்முனையின் நிர்வாக ஆளுகை மற்றும் நிருவாகப் பரப்பை அபகரிப்பது தொடர்பில் கல்முனை தமிழ் தரப்பினர் இனரீதியான 'கல்முனை உப பிரதேச செயலகம்' ஒன்றை கோரி நிற்பதும் கல்முனை முஸ்லிம்கள் அதனை சட்டவிரோத கோரிக்கை என்று சொல்லி தொடர்ச்சியாக மறுத்துவருவதும், இது தொடர்பில் மூன்று வழக்குகள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மூன்று வழக்குகள் தொடருகின்றன . இருப்பினும், எமது மண்ணின் பூர்வீக குடிகளில் ஒருவராகிய நீங்கள் கல்முனையில் பிறக்கின்றபோதே, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் கல்முனை தாளவாட்டுவான் வீதி மற்றும் கல்முனை ஸாஹிரா கல்லூரி வீதிகளால் எல்லைப்படுத்தப்பட்டு கல்முனை என்று பெயரிடப்பட்ட கல்முனை பட்டினத்தின் ஏழு வட்டாரங்களில் ஒன்றான ஐந்தாம் வடடாரத்தில்தான் பிறந்தீர்கள் என்பதற்கு நீங்களும் இந்த மண்ணின் பூர்வீக குடிகளாகிய நாங்களும் சாட்சி. கல்முனையில் இருக்கின்ற முஹையதீன் ஜ/ம்மா பெரியபள்ளிவாசல் உட்பட 24 பள்ளிவாயல்கள், 35 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் அனைத்தும் சேர்ந்த சம்மேளனத்தின் சார்பாக நாங்கள் ஒரு பிரேரணையை முன் வைத்து 300 இற்கும் அதிகமான எமது கல்முனை பிராந்திய மக்கள் ஒப்பமிட்டு அதனை முன்னாள் கல்முனை மாநகர சபை மேயர் நிசாம் காரியப்பர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். அதேநேரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இதன் பிரதியும் அனுப்பி வைத்திருக்கின்றோம்.

துரதிர்ஷ்டவசமாக தமிழர் தரப்பினரின் கோரிக்கையில் கல்முனையில் 99 வீதம் தமிழர்களே வாழ்கின்றனர் எனவும் கல்முனை பூர்வீக பிரதேசம் என்றும் வாதிட்டு வருகிறார்கள் என்பதையும், அந்த கோரிக்கையின் பாரதூரமானது கல்முனையின் பூர்விக குடிகளாகிய எம்மை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதும் தலைசிறந்த சட்டத்தரணியான நீங்கள் அறியாத ஒன்றல்ல. அவர்களின் இந்த நச்சுத்தன்மையான கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் இலங்கையின் தலை நகரில் ஒரு சர்வதேச விருந்தினர்களுடன் இந்த புத்தகத்தை நீங்கள் வெளியிட முனைவதானது கல்முனை என்ற முஸ்லிம்களின் பூர்வீக நிலத்தை கல்முனைக்குடி என்று நாமம் சூட்டும் விழாவாக நீங் கள் கொண்டாட எத்தணிக்கும் ஒரு துரோகச் செயலாகவே நாங்கள் கருதுகிறோம். இவை அனைத்தும் அறிந்திருந்தும் நீங்கள் வெளியிட இருக்கும் இந்த புத்தகம் அல்லது நீங்கள் நாமம் சூட்ட முயற்சிக்கும் 'கல்முனைக்குடி' என்ற நாமம். சமகாலத்தில் பாரிய சர்ச்சைக்குரிய விடயம் என்பதை நீங்கள் விளங்கியிருந்தும், குறித்த புத்தகம் இந்த பெயரில் வெளியிடப்படும் பட்சத்தில் அது ஓர் ஆவணமாக கொள்ளப்பட்டு எமது இருப்பு தொடர்பில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் கூறித்தான் நீங்கள் அறிய வேண்டிய அவசியம் இல்லை.

எனவே உடனடியாக வெளியிட இருக்கும் புத்தகத்தின் பெயரை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அதற்கான அவகாசம் போதாது என்று நீங்கள் கருதும் பட்சத்தில் இந்த வெளியீட்டு விழாவை இன்னொரு தினத்திற்கு மாற்றியாவது இந்த திருத்தத்தை மேற்கொள்ள முடியும்.

எனவே, எமது அதிருப்தியையும் கண்டனத்தையும் இத்தால் தெரிவிப்பதோடு அந்த கல்முனைக்குடி நாட்கள்' என்ற புத்தகத்தின் தலைப்பானது நாங்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துவரும் கல்முனையின் பூர்வீகம் நிருவாகம் அபிவிருத்தி அடையாளம் மற்றும் ஆளுமை தொடர்பான அச்சுறுத்தல் மட்டுமல்லாது மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களின் தென்கிழக்கின் முகவெற்றிலை கல்முனை என்ற எண்ணக்கருவிற்கு சவாலான ஒன்றாகும் என்பதை கருத்திற் கொண்டு, இந்தக் கோரிக்கைக்கு செவிமடுத்து உடனடியாக தலைப்பில் மாற்றத்தை செய்வீர்கள் என்று, உலமாக்கள் பள்ளிவாசல் பிரமுகர்கள் புத்திஜீவிகள் வர்த்தகர்கள் இளைஞர்கள் அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அடங்கலாக கல்முனையின் பூர்வீக குடிகளாகிய நாங்கள் வினயமாக கேட்டுக் கொள்கிறோம் என்றனர்.

குறித்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கல்முனை சமூக நலன்புரி அமைப்பின் தலைவர் ஹமீட் எஸ்.லெப்பை கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிச் செயலா ளர் எம்.எச்.ஏ கரீம் (பி.ஏ) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்முனை நகர அமைப்பாளருமான பி.ரி. ஜமால் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கானல் நீர்

எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையினை உருவாக்கும் பொருட்டு தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளி மீண்டும் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

''நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களை அழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாகுவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி ஒரு பொதுவான அரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணையவேண்டும். இந்தப் புள்ளியில்தான் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும், அத்தகைய நேர்கோட்டில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவது குறித்தும், கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும், அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்பு என்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கிறேன்" என்றார் அவர்.

அவரது அழைப்பு சிறப்பானது. காலத்தின் தேவையும்கூட. அந்தத் தேவை இப்போது ஏற்பட்டதும் அல்ல. அது மிக நீண்ட காலத்திற்கு முன்பே ஏற்பட்டது. ஆனால், உதட்டளவில் ஒற்றுமை, கூட்டுச் செயற்பாடு என்பன பற்றியெல்லாம் பேசிய தமிழ்த் தேசியக் கட்சிகள் உண்மையில் தேர்தல் கூட்டு ஒன்றைக் கொண்டிருந்தனவே தவிர இன நலனுக்கான கூட்டைக் கொண்டிருக்கவில்லை. இல்லையென்றால் மாகாண சபையால் நிராகரிக்கப்பட்ட கரும்புப் பண்ணைகள் மற்றும் சீனித் தொழிற்சாலை என்ற திட்டத்தை கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சி ஒன்றே முன்னின்றி செயற்படுத்த விளைந்திருக்காது.

சிறீதரனின் அழைப்புத் தொடர்பான கள யதார்த்தம் என்ன என்பது குறித்தும் கேள்வி இருக்கின்றது. ஒரு கோசமாக அவரது அழைப்பு உயர்த்திப் பிடிக்கத்தக்கது. ஆனால், அவரது கட்சிக்குள்ளேயே அதற்கு ஆதரவு கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில் தற்போதைக்கு தமிழ் மக்களின் உயர் கோரிக்கையான கூட்டாட்சியை (சமஷ்டி) எப்படி அடைவது என்பதில் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயே ஒருமித்த கருத்துக் கிடையாது. அதிலும் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்குமேகூட இது விடயத்தில் ஒருமித்த கருத்துக் கிடையாது.

சிறீதரன் கூறுவதைப் போன்று வேற்றுமையில் ஒன்றுமை ஒற்றுமையில் வேற்றுமை என்பதை சிறீதரனாலேயே கைக்கொள்ளமுடியாது என்பதே களயதார்த்தம். சிறீதரனின் வழிமுறைகளை சுமந்திரன் ஏற்றுக்கொண்டாலும்கூட சமஷ்டியை அடைவதற்கான சுமந்திரனின் கொழும்பு மைய அரசியலை சிறீதரன் ஒருபோதும் ஏற்கமாட்டார். அது போன்றே ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளும்கூட.

தமிழ் மக்களுக்கான தீர்வை அடையும் வழி குறித்து அவற்றால் ஒருபோதும் ஒருமித்த கருத்தை அடைய முடியாது. அப்படியிருக்கும்போது தேர்தல் கூட்டு என்பதற்கு வெளியே இன நலனை முன்னிறுத்திய ஒரு அரசியல் கூட்டை அமைப்பது என்பது வெறும் கனவுதான். கடந்த 15 ஆண்டுகளில் அத்தகைய ஓர் இடத்தை அடைய முடியாத அரசியல் கட்சிகள் இனிமேல் அதனை அடையும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

சிறீதரனின் அழைப்பு உண்மையானால், நேர்மையாக அணுகப்பட்டால் தமிழ் இனத்திற்கு அது சிறப்பானதோர் முன்னேற்றத்தைத் தரும். ஆனால், தலைமைக்கு ஆசைப்பட்டு கட்சிகளை உருவாக்கிக்கொண்டவர்கள் அத்தகைய ஒரு நேர்மையான முயற்சிக்கு ஒத்துழைப்பார்கள் என்று எண்ணமுடியவில்லை.




# நேட்டோவின் 75 ஆண்டுகளில்: எதிர்ப்புரட்சி கொள்கையும் இராணுவ வல்லாதிக்கமும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

1949 இல் நேட்டோ உருவாக்கத்தின் பின்னர், இடதுசாரி நாடுகளில் ஒரு வன்முறை, எதிர்ப்புரட்சிக் கொள்கையைப் பின்பற்றியது. அமெரிக்கா, பிரான்ஸ் பிற நேட்டோ நாடுகள் குறிப்பாக இந்தோசீனா, கொரியா, அல்ஜீரியாவில் காலனித்துவ போர்களை நடத்தி வந்தன.

### எதிர்ப்புரட்சி கொள்கையும் உருவாக்கமும்:

அதன் பின்னர் நேட்டோ பின்னர் கிரீஸ் மற்றும் துருக்கியில் ஆட்சிக்க விழ்ப்புகளை ஆதரித்ததோடு, சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி தேசியவாத அரசாங்கங்களுக்கு எதிரானவர்களுக்கு ஆதரவளித்தது.



எவ்வாறாயினும், அமெரிக்க ஆளும் உயரடுக்கில் சோவியத் யூனியனை "கட்டுப்படுத்துவதன்" மூலமாகவோ அல்லது இராணுவப் "பின்வாங்கல்" மூலமாகவோ, இடதுசாரி எழுச்சிகளை பல நாடுகளிலும் வன்முறைகளால் அழித்தமை வரலாறாகும்.




### வாஷிங்டனில் நேட்டோவின் 75வது ஆண்டு:

நேட்டோ தனது 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வாஷிங்டனில் மூன்று நாள் ஜூலை 8 முதல் 11 வரை இந்த உச்சி மாநாடு நடந்தது.

வாஷிங்டனில் உள்ள மெலன் ஆடிட்டோரியத்தில் நேட்டோவின் 75வது ஆண்டு விழாவின் போது நேட்டோ தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டின் முக்கிய விடயமாக உக்ரைனுக்கான இராணுவ உதவி அமைந்தது. உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவக் கூட்டமைப்பில் உக்ரைன் நேட்டோ உறுப்பினருக்கான "திரும்ப முடியாத"(Irreversible Path)பாதையில் இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அத்துடன் இராணுவ உதவியாக குறைந்தபட்சம் 43 பில்லியன் டாலர் வழங்க உறுதியளித்தது.

இந்த மாநாடு நடைபெறும் வேளையில், ஜேர்மனியில் அமெரிக்க ஏவுகணைகள் நிலை நிறுத்தப்படுவதை பனிப்போர் திரும்புவதைக் குறிக்கிறது என்று ரஷ்யாவும் கூறியுள்ளது.

### உக்ரைனும் மீளும் பனிப்போரும்:

2024 இல் ஒவ்வொரு நேட்டோ நாடும் அதன் இராணுவத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறது என்பதை யாரும் அறிந்தால் அதிர்ந்து போய்விடுவார்கள்.

உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவக் கூட்டணியின் 32 உறுப்பினர்கள் இந்த ஆண்டு 1.47 டிரில்லியன் டாலர் செலவழிக்க திட்டமிட்டுள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேலும் 2% ஆக உயர்த்த நேட்டோ தனது உறுப்பினர்களை வேண்டுகிறது.

நேட்டோவின் 75வது ஆண்டு நிறைவு மாநாட்டில் ஸ்பெயின் பிரதமர் நேட்டோ அமைப்பு காசா, உக்ரைன் மீதான இரட்டைத் தரத்தை தவிர்க்க வேண்டும் என கோரினார். காசா போரில் பல நேட்டோ நாடுகள் இஸ்ரேலை கண்டித்துள்ளன.

2006 ஆம் ஆண்டில், நேட்டோ கூட்டணியின் இராணுவத் தயார்நிலையை உறுதி செய்வதற் காக, அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) குறைந்தபட்சம் 2 சத வீதத்தை பாது காப்புச் செலவீனங்களுக்கு வழங்க, கூட்டணியின் பாதுகாப்பு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.


தற்போது, அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் (32 இல் 23) இந்த உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளனர்.

### சோவியத்தை உடைக்கும் திட்டம்:

பனிப்போரின் ஆரம்ப காலத்தில், அணு ஆயுதப் போரை ஆபத்தில் ஆழ்த்துவதன் மூலம் கிழக்கு ஐரோப்பாவை பயமுறுத்தி வைத்தனர்.

(7ஆம் பக்கம் பார்க்க..)





# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தொழில் நிலையம் திறந்துவைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை வலுவூட்டும் முயற்சியின் ஒரு பகுதியாக சனிக்கிழமை லிங்கநகர் பிரதேசத்தில் சத்துமா, அரிசி, கோப்பி, மிளகாய், உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அரைக்கும் ஆலை ஒன்றைத் தொடக்கி வைத்தது.

இந்த அரவை ஆலை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அரவை ஆலையின் மூலம் இருபதிற்கும் மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், கனடா திருக்கோணமலை நலன்புரி சங்கப் பொருளாளர் இலட்சும வாசன் இலட்சுமணப் பெருமாள், திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் துணைத் தலைவர் மருத்துவர் எலியசர் ஞானகுணாளன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன், செயலாளர் கனபதிப் பிள்ளை சிவானந்தம் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# மாமனார் தாக்கிக் கொலை 32 வயது மருமகன் கைது





(பாறுக் ஷிஹான்)

தாக்குதலால் உயிரிழந்த மாமனாரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொலை செய்தார் என்கிற சந்தேகத்தில் மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குபட்ட வொலிவேரியன் கிராமத்தில் பிரிவு 09 நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சந்தேகநபரான 32 வயதுடைய சந்தேக நபர் றிஸ்வி முகமட் அன்சார் தலைமறைவாகியுள்ளார்.

திருமணமான தனது மகளை விவாகரத்து செய்ய தயாரான மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலையில் முடிவடைந்துள்ளதாக அடிப்படை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அடிக்கடி இவ்விடயத்தால் தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த மருமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டிற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் அம்பாறையில் இருந்து வரவழைக்கப்பட்ட தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த 62 வயதுடய மீராசாயிப் சின்னராசா என்பவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chicken Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வேலையற்ற பட்டதாரிகள் அம்பாறையில் கவனவீர்ப்பு





(பாறுக் ஷிஹான்)

தமது தொழில் நியமனம் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சனிக்கிழமை ஒன்று கூடி காரைதீவு சந்திக்கு அருகில் தமது பிள்ளைகளுடன் வந்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏனைய மாவட்டங்களை போன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமது தொழில் நியமனத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு கோசங்களும் எழுப்பப்பட்டன.

வயது ஏறுகிறது வாழ்க்கை போகுது வேலை வேண்டும், நாம்கண்ட கனவு பொய்யாகிவிடுமோ, பட்டம் வீட்டில் நாங்கள் றோட்டில் 'பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்', 'கல்வி கொடுத்த அரசே கொள்ளிவைக்கலாமா?', 'அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தினை அழிக்காதே' போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

வருடங்கள் போகப்போக வயது போவதன் காரணமாக பின்னர் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படும் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அழிக்காதே அழிக்காதே எதிர்காலத்தினை அழிக்காதே, பட்டதாரிகள் வீதிகளில் நின்றால் நாடு முன்னேறுவது எவ்வாறு?, பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்? போன்ற பதாகைகளை தாங்கியவாறு போராட்டக்காரர்கள் தமது தொழில் உரிமையினை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பினர்.

தமது போராட்டம் தொடர்பில் இதுவரையில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என கவன ஈர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது சிறிது தூரம் பேரணியாக இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் உதுமாலெப்பை முகமது முஹ்சீன் , செயலாளர் அப்துல் வஹாப் முப்லிஹ் அகமட் உப்பட குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் பேரணியிலும் இணைந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (05)

# தம்பலகாமம் வயல் வெளியில் எரிந்த நிலையில் சடலம் மீட்பு






(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணாமலை - தம்பலகாமம் பொலீஸ் பிரிவுக்குப்பட்ட கூட்டாம்புளி எனும் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று சனிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது . இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயசீலன் (வயது 53) என தம்பலகாமம் பொலீஸார் தெரிவித்தனர்.

விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்ற வேளையில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டதை அடுத்து தம்பலகாமம் போலீஸாருக்கு தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து அவ்விடத்துக்கு வந்த தம்பலகாம பொலீஸார் சடலத்தை மீட்டுள்ளனர் . குறித்த சம்பவ இடத்துக்கு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் விஜயம் செய்து சடலத்தை பார்வையிட்டதுடன் சட்ட வைத்திய அதிகாரியும் பார்வை யிட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகமம் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## 22ஆவது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாக இருக்கிறது. அதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பு திருத்தம் பாதிப்பாக அமையாது. அவ்வாறான நிலையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு தற்போதைய சூழலில் 22ஆம் திருத்தத்தை கொண்டுவராமல் இருந்திருக்க வேண்டும். இதனை அடுத்துவரும்புதிய ஆளும்தரப்பிடம் கையளித்திருக்கவேண்டும் - என்றார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலுக்கான வேட்புமனுத் திகதி, தேர்தலுக்கான வாக்கெடுப்புத் திகதி ஆகியவற்றை அது அறிவிக்க வேண்டும்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா இல்லையா என்ற இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அது தேவையில்லை. அவ்வாறு இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாயின், ரணில் போட்டியிடுவாரா இல்லையா என்பதுதான். அதேபோன்று ரணில் போட்டியிடும் சின்னம் என்ன யானையா இல்லை மொட்டா என்பதுதான். ரணிலுக்கு மஹிந்த ஆதரவளிப்பாரா இல்லையா இவ்வாறான கேள்விகள்தான் உள்ளன.

ரணிலே தற்போது இரட்டை நிலைப்பாட்டில் உள்ளார். தீர்மானம் எடுக்க முடியாதுள்ளார். இதனால்தான் மக்களை அவர் இருவேறு நிலைப்பாடுகளுக்குள் தள்ளிவிடுவதற்கு முயற்சிக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தலுக்கும் தயராகவே உள்ளது. ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். ரணில் தோல்வி அடைவார். அமைதியாக வீட்டுக்குச் செல்வார். அதுதான் நடைபெறும் - என்றார்.

## வங்குரோத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தினை நாட்டின் தேசிய நிகழ்ச்சி நிரலில் முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஏற்றுமதித்துறையை மேம்படுத்துவதற்கு மூலதனம் மிகவும் அவசியமானதாகும். அதனை எவ்வாறு பெற்றக்கொள்வது. நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்வது. முதலீடுகள் சம்பந்தமாக அதிகளவு இலாபம் கிடைக்கின்றபோதே முதலீட்டாளர்கள் அந்த நாடுகளுக்கச் செல்வார்கள்.

ஆகவே நாம் இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. முதலீட்டாளர்கள் ஏனைய நாடுகளை விடுத்து இலங்கையை தெரிவு செய்வதற்கான சூழலை தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்றார்.

## 4ஆம் கட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிக்கப்படும் என்ற உறுதி மொழியுடன், சுமார் 375 மில்லியன் ரூபா செலவில், 1,300 வீடுகளை கட்டுவதற்காக, பாரத் -லங்கா மலைநாட்டு தோட்ட வீடமைப்பு திட்டம் என்ற பெயரில், கோலாகலமாக தொடக்கி வைக்கப்பட்ட, நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டம் இடையில் நின்றுவிட்டது. இந்த வீட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் இந்திய தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை என்றும் இந்திய தூதர் தெரிவித்துள்ளார்.

தமுகூ தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலு குமார், உதய குமார் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். நேற்று அரசியல் நிலைமை, இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கான இந்திய உதவிகள், மலையகத்துக்கான பிரத்தியேக கல்வி, தொழில்நுட்ப துறைகளுக்கான உதவிகள் ஆகியவை பற்றி இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமுகூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்குபெறுகின்ற எமது ஆளும்தரப்பு விரைவில் உருவாகும். கடந்த 2015 - -2019 நல்லாட்சியில் நடைபெற்றதை போன்று, தாமதங்களைக் களைந்து ஒட்டுமொத்த 10,000 வீடமைப்பு பணிகளையும் நாம் செய்து முடிப்போம் என நாம் இந்திய தூதர் சந்தோஷ் ஜாவிடம் உறுதி கூறினோம்.

மலையக பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை தொடர்பில் இன்று நிலவும் உதாசீனப் போக்கை நாம் முடிவுக்கு கொண்டு வருவோம். 200 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் அரசு கட்டிய லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற சொல்ல முயலும் முயற்சியை, எமது காணி உரிமையை குழி தோண்டி புதைக்கும் செயல்பாடாக நாம் பார்ப்பதற்கு காணி உரிமை தொடர்பில் இன்றைய ஆளும் தரப்பின் உதாசீன போக்கே காரணம் எனவும் நாம் இந்திய தூதரிடம் எடுத்து கூறினோம். மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து, லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற யோசனைக்கு, நாம் வழங்கிய ஆறு அம்ச மாற்று யோசனை ஆவணத்தையும் நாம் இந்தியத் தரப்புக்கு வழங்கினோம்.

நான்காம் கட்ட இந்திய வீடமைப்புத் திட்டத்துக்கு மேலதிகமாக, இந்திய அரசு பின்வரும் உதவிகளை மலையக மக்களின் நலன் கருதி வழங்க உள்ளதாக எமக்கு இந்திய தூதர் சந்தோஷ் ஜா எடுத்து கூறினார்.

விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்ப கல்வி, கணிதம் ஆகிய துறை சார் ஆசிரியர் பயிற்சி.

மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள், பாடசாலை பைகள் வழங்கல்.

தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு சூரிய சக்தி மூலமான விளக்குகள்.

ஸ்மார்ட் வகுப்பறைகள், பாடசாலை பௌதிக கட்டுமானங்கள், தொண்டமான் தொழில்நுட்ப நிலையத்தை தரம் உயர்த்தும் உதவிகள்.

இவை அனைத்தும் நமது மக்கள் நலன் கருதி இந்திய அரசால் வழங்கப்படும் உதவிகள். இவற்றை அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் பாரபட்சம் இன்றி அனைத்து மாவட்ட மக்களுக்கும் வழங்குவதை உறுதி செய்யும்படி இந்திய அரசை நாம் கோரினோம - என்றார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை அதிகரிக்கப்படவுள்ளது. இது தவிர பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த அபராதத்தையும் அதிகரிப்பதற்கு இந்த சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## புளியங்கூடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் 8 லட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பெட்டகம் உடைக்கப்படாமல் நூதனமாகத் திருட்டு இடம்பெற்றிருந்தது.

பொலிஸில் முறையிடப்பட்டு நீண்ட நாள்களாகியும் குற்றவாளிகள் கைதுசெய்யப்படவில்லை. இதனால் அதிருப்தியடைந்த ஊர் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெட்டகம் உடைக்கப்படாததால் போலிச் சாவிகளைகளைப் பயன்படுத்தியே நகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்த பொலிஸார், ஆலயத்தோடு தெடர்புடையவர்களை சந்தேகத்தோடு அணுகி விசாரணை நடத்தினர். இதில் திருவிழாக் காலங்களில் ஆலயத்தில் பணியாற்றிய 28 வயதான உதவிக் குழுக்களில் சந்தேகப்பட்டு அவரிடம் விசாரணை நடத்தியதில் திருடப்பட்ட நகைகளில் ஒரு தொகுதி அவரிடம் இருந்து மீட்கப்பட்டது. ஒரு தொகுதிப் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார். சந்தேநபர் கைது செய்யப்பட்டு, கோயில் நகைகள் ஒரு தொகுதி மீட்டக்கப்பட்டதை அடுத்து பிரதேச மக்கள் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத காரணத்தினால், அவர்களும் எனக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. பின்னர் பொது ஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல்.பீரிஸிடம் ஒத்துழைப்பு கேட்டேன். அவர் என்னை சந்திக்கக்கூடத் தயாராக இருக்கவில்லை. நான் பேசினேன். அவர் என்னோடு பேசக்கூட தயாராக இருக்கவில்லை. பின்னர் மஹிந்த ராஜக்சவைச் சந்தித்து பேசினேன். அவர் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அவ்வாறு ஆரம்பித்த ஆளும் தரப்பில் நான் ஜனாதிபதியாக இருக்க எனக்கு ஓர் இடமிருக்கவில்லை. ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடியிருந்த மக்கள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்தனர். எனது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அலுவலகமும் முற்றுகையிடப்பட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் மட்டும் எஞ்சியிருந்தால் அதன் மேல் மாடியில் நானும், கீழ் மாடியில் பிரதமர் தினேஸ் குணவர்தனவும் பணிகளை ஆரம்பித்தோம்.

அதன் பின்னர்தான் ஐ.எம்.எப். உடன் கலந்துரையாடி அடுத்தகட்டப் பணிகளை ஆரம்பித்தோம். அனைவரும் ஒன்றுபட்டே பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்பதை நான் அறிந்துகொண்டேன். அரசியல் செய்து இந்த நாடு சீரழிக்கப்பட்டிருந்தது. இலங்கை பெருமைக்குரிய நாடு. இந்த நாடு இந்த நிலைக்குச் செல்லவேண்டியது அவசியமா? மகாவம்சத்தில்கூட இந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தாகக் குறிப்பிடப்படவில்லை.

கஷ்டமான தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டியிருந்தது. நாட்டுக்கு எரிபொருள் கொள்வனவு செய்ய புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் அனுப்பும் வரையில் காத்திருந்தோம். அமெரிக்காவின் சமந்தா பவரின் உதவியோடு, உலக வங்கியின் உதவியில் உரத்தைப் பெற்றுக்கொடுத்தோம். கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. ஆளும்தரப்பின் செலவுகளைக் குறைத்தோம். பணத்தை அச்சிட வேண்டாம் என்ற நிபந்தனையை ஐ.எம்.எப். விதித்தது. வங்கிகளிடத்திலிருந்து கடன் பெற வேண்டாமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

சில நிவாரணங்களைத் தவிர்த்து வருமானங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றைச் செய்திருக்காவிட்டால் நெருக்கடியில் விழுந்திருப்போம். எந்த அளவு கஷ்டங்கள் வந்தாலும் எழுந்து வர முடியும் என்று நம்பினேன். இவ்வாறு முன்னோக்கிச் சென்றபோதும் பலமுறை எதிர்கட்சியின் ஒத்துழைப்பைக் கோரினேன்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினேன். அவர்கள் ஆதரவு வழங்க முன்வரவில்லை. நான் மக்களின் மேம்பாட்டுக்காகவும் நாட்டின் மேம்பாட்டுக்காவுமே பாடுபடுகிறேன் என்பதை அறிந்து அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் மக்களுக்காக சிறிதும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை.

உலக நாடுகளும் எமக்கு உதவ முன்வர கூடாதென அறிவிப்புக்களை வெளியிட்டனர். ஆனால் எமது பயணம் தொடர்ந்தது. எமக்கு கடன் வழங்கும் நாடுகள், ஐ.எம்.எப். அமைப்பு உள்ளிட்ட அனைத்து தரப்புக்களும் இப்போது எம்மோடு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. இலங்கையை இந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கிறோம். இன்னும் சிறிது நாட்களில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டது என்ற அறிவிப்பு வரும். அதன் பின்னர் நம் முன்பிருக்கும் பல தடைகள் நீங்கிவிடும்.

தற்போதும் சில தடைகள் நீங்கியுள்ளன. எமக்கு உதவி வழங்கிய தரப்புக்கள் சில வேலைத்திட்டங்களுக்காக மீண்டும் நிதி வழங்குகின்றன. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பணிகளும் ஆரம்பிக்கப்படும். அவ்வாறான நிலையை தற்போது அடைந்திருக்கிறோம்.

எரிபொருள், உரம், மின்சாரம், மருந்து என அத்தியாவசியப் பொருட்கள் இருக்கவில்லை. வைத்திய சாலைகளும் பாடசாலைகளும் மூடிக்கிடந்தன. அந்த காலம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? கண்டி வீதியின் இந்தப் பகுதியில் காணப்பட்ட வரிசைகள் நினைவிருக்கிறதா? பியன்வில வரையில் வரிசைகள் நீண்டு காணப்பட்டன. வரிசைகளுக்கு இடம் போதவில்லை. அப்படியொரு நிலையே நாட்டில் இருந்தது. அவ்வாறான கஷ்டங்கள் எமக்கு மீண்டும் வேண்டுமா? அல்லது முன்னோக்கிச் செல்லப் போகிறோமா?

பிரச்சினைகள் உள்ளன. இருப்பினும் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். நான்கு வருடங்கள் தொழில் கிடைக்கவில்லை. தனியார், ஆளும்தரப்பு என இரு துறைகளும் வழங்கவில்லை. வருமான வழிகளை உருவாக்கவேண்டும். இப்போது வெளிநாடுகளுக்குப் பலர் செல்கிறார்கள். இன்னும் பல வருடங்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லையென்றால் மற்றுமொரு மக்கள் போராட்டம் வெடிக்கும். இன்று அவ்வாறான பிரச்சினைகளுக்கே முகம் கொடுக்கிறோம்.

நாட்டு மக்களின் வருமானத்தை மேம்படுத்தவேண்டும். முன்னேறிச் செல்லவேண்டும். வளர்ச்சி கண்ட உலகத்துடன் இணைந்து பயனிக்கவேண்டும். இந்த ஆளும்தரப்பு ஒருபோதும் வறிய மக்களை மறந்துவிடவில்லை. நாட்டின் வறுமை 25 சதவீதமாக காணப்படுகிறது. அதனைக் குறைப்பதற்கான முதல் முயற்சியாக சமூர்த்திக்கு மாறாக 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் 3 மடங்கு அதிக கொடுப்பனவை வழங்கினோம். பயனாளிகள் எண்ணிக்கையை 18 - 24 இலட்சம் வரையில் அதிகரித்தோம்.

10 கிலோ அரிசியை இலவசமாக வழங்கினோம். மருந்துகள் தட்டுபாடின்றி கிடைக்கிறன. பிரச்சினைகள் குறைந்துள்ளன.

கிராமப்பகுதிகளிலேயே வறுமை அதிகமாகவுள்ளது. அதனை நிவர்த்திக்க விவசாய நவீமயமாக்கல் திட்டத்துடன் சுற்றுலா பயணிகள் வருகையை 50 இலட்சம் வரையில் அதிகரிப்பதற்கான திட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம்.

இதனால் சிறிய காணிகளிலும் பெருமளவு வருமானம் ஈட்டலாம். மக்களை மேம்படுத்தவும், இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கவும் புரட்சிகர திட்டங்களை செயற்படுத்துகிறோம். அந்த முயற்சிகளை கைவிட முடியாது. அதற்காகவே பொருளாதார மாற்றச் சட்டமூலத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம். இங்குள்ள இளையோர் தமது வருமானத்தை ஐந்து மடங்காக அதிகரித்துக்கொள்ள விரும்புகின்றனர்.

வறுமையிலிருந்து விடுபட எதிர்பார்க்கின்றனர். அதற்கு நாமும் ஒத்துழைக்கவேண்டும். கல்வி மறுசீரமைப்பு செய்யப்படும். அத்தோடு தொழில் கல்வியும் மறுசீரமைக்கப்படும். பல்கலைக் கழகங்கள் புதிதாக உருவாக்கப்படும். அனைத்து துறைகளும் டிஜிட்டல் மயமாக்கப்படும். எமக்கு எதிர்காலம் இருக்க வேண்டும். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பியகம அபிவிருத்தி அடையாத பகுதியாக காணப்பட்டது. சிலர் சாக்குகளையும், பீடியும் தயாரித்தனர். கல்வி அமைச்சராக இந்த காலப் பகுதியில் இரண்டு வர்த்தக வலயங்களையும், மின் உற்பத்தி நிலையத்தையும், இப்பகுதியை சுற்றிலும் தொழிற்சாலைகளையும் அமைக்க வழி செய்திருக்கிறேன்.

இலங்கையின் மிகப்பெரிய தொழில் வலயமாக இந்த பகுதியை மாற்றியிருக்கிறோம். மற்றைய பகுதிகளில் ஏன் இதனை செய்ய முடியாமல் உள்ளது. இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையும் இங்கு கொண்டுவரப்பட்டது. இங்கு 160 ஏக்கரில் கேரகல பகுதியில் மூன்றாவது வர்த்தக வலயத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

சுத்திகரிப்பு நிலையம் திருகோணமலைக்கு கொண்டுச் செல்லப்பட்ட பின்னர் சபுகஸ்கந்த அபிவிருத்தி செய்யப்படும். இதேபோல் கண்டி, யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதுவே எமது எதிர்காலமாக இருக்க வேண்டும்.

இந்நாட்டின் எதிர்காலத்தை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கட்டமைக்க இடமளியேன். நாட்டின் தேவைக்கேற்ப அரசியல்வாதிகள் இசைந்துச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். சிங்களவர்கள் என்று கூறிக்கொண்டு யாசகம் செய்வதில் பயனில்லை. பெருமிதம் உள்ள மனிதர்கள் என்றால் முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்கான மாற்றத்தை செய்வோம்.

போலி வாக்குறுதிகளை வழங்குவதில் பயனில்லை. அதனால் சஜித், அனுரவை எம்மோடு இணைந்து முன்னோக்கிச் செல்ல வருமாறு அழைக்கிறேன். கம்பஹா இலங்கையின் இதயமாகும். டீ.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன போன்றவர்கள் இங்குதான் உருவாகினர். ஐக்கிய தேசிய கட்சியினரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்பட முன்வாருங்கள். பண்டாரநாயக்கவும், டீ.எஸ்.சேனநாயக்கவும் சுதந்திரத்துக்காக ஒற்றுமையாக செயற்பட்டனர்.

1971 கலவர காலத்தில் சிறிமாவோ பண்டாராநாயக்கவுக்கு ஜே.ஆர்.ஜயவர்தனவுக்கு உதவி வழங்கினார். அதன் பின்னர் பிரேமதாசவின் காலத்திலும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் எமக்கு உதவி வழங்க முன்வந்தார். நாடாளுமன்றத்தில் மோதினாலும் நாட்டைப் பாதுகாக்க அர்ப்பணித்திருக்கிறோம். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் ஜனநாயகத்தைப் பாதுகாத்திருக்கிறோம். ஆசியாவில் எந்த நாட்டுக்கும் அந்தப் பெருமை இல்லை. நாம் இதே பாதையில் முன்னோக்கி செல்ல வேண்டும். மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல முடியாது. நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கி கொள்வோம். அழைப்புக்கு உரிய பதில் வழங்க வேண்டும். அதனை நேரம் வரும் போது கூறுவேன்' என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மூதூரில் நேற்று பஸ் விபத்து 65 பயணிகளுக்குப் பாதிப்பு

(மூதூர் நிருபர்)

வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் செல்வதற்காக மூதூர் பகுதியூடாக பக்தர்கள் பயணத்திக்கொண்டிருந்த பஸ் ஒன்று மூதூர் கெங்கை பாலமருகே விபத்துக்குள்ளானதன் காரணமாக. 65 பேர் விபத்துக்குள்ளாகினர் எளவும் ஆண்கள் பெண்கள் சிறுவர்களும் இதில் அடங்குகின்றனர் எனவும் கூறப்படுகின்றது

விபத்துக்குள்ளானோர் மூதூர் தளவைத்தியசாலையில் சிகிச்சையளிப்பதற்காக அவசரமாக அம்புலன்ஸ் மூலம் கொண்டுசென்று சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டனர் .

ஏனையோர் வெள்ளிக்கிழமை இரவு மூதூர் தி/மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலய இடைத்தங்கல் முகாமில் அவசரமாக. மூன்னூறுக்கும் அதிகமானோர் தங்கவைக்கப்பட்டனர்.

இவர்களுக்குத்தேவையான. ஏனைய வசதிகளை மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் பிரதேச சமூக மட்ட பொது அமைப்புகள் வழங்கியிருந்தனர். விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருவோர்களை மூதூர் பிரதேச செயலாளர் எம்.எச்.முகமட் கனி மூதூர் தள வைத்தியசாலைக்கு உடனடியாகச்சென்று பார்வையிட்டு சுகம் விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு அவர்களுக்குத் தேவையானஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது -

ஐந்து பஸ்கள் கதிர்காமம் நோக்கிப் பயணித்ததில் ஒரு பஸ் இவ்வாறு விபத்துக்குள்ளானதாகவும் ஏனைய பஸ் பயணித்தோர்களும் இதன் காரணமாக தமது பயணத்தை இடை நிறுத்தி இவ் இடைத்தங்கல் முகாமில் வெள்ளிக்கிழமை தங்கவைக்கப்பட்டு சனிக்கிழமை காலை கதிர்காமம் நோக்கி பக்தர்கள் பயணித்தனர். இடைத்தங்கல் முகாமில் தற்போது விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்குத்தேவையான வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

அதாவுல்லா எம்.பியின்

# பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பொது அமைப்புகளுக்கு உபகரணங்கள

(எஸ்.எல்.நௌபர்)

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூதூர், தோப்பூர் மற்றும் ஏனைய பகுதிகளிலுள்ள பொது அமைப்புகளுக்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளரும் மூதூர் பதில் பிரதேச செயலாளருமான எம்.எச். முகம்மது கனி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மூதூர் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், மூதூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அவர்களுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்த உபகரணங்கள் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்கள், விளையாட்டு கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களுக்கும் கையளிக்கப்பட்டன. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா பிரதம அதிதியாக கலந்துகொண்டு இதனை பொது அமைப்புகளிடம் கையளித்தார். இதன் போது மூதூருக்கு அதாவுல்லாவால் ஆற்றப்பட்டுவருகின்ற பல்வேறு விதமான சேவைகள் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்விற்கு மூதூர் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# நேட்டோவின் 75 ஆண்டுகளில்......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

எவ்வாறாயினும், அமெரிக்க அரசு தனது நீண்டகால இலக்கான

சோவியத் ஒன்றியத்தை அழிப்பதை ஒருபோதும் கைவிடவில்லை. இறுதியில் பனிப்போர் 1991 இல் முடிவுக்கு வந்தது.

சோவியத் ஒன்றியத்தில் 1917 அக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட சோசலிச நடைமுறையை கலைத்து, முதலாளித்துவத்தை மீட்டெடுத்து, வார்சா ஒப்பந்தத்தையும் சோவியத் யூனியனையும் கலைத்தது.

சோவியத் யூனியனால் முன்வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆபத்துடன் தனது இருப்பை எப்போதும் நியாயப்படுத்தி வந்த நேட்டோ, பனிப்போரின் பின்னர் தன்னைக் கலைக்கவில்லை.

**ரஷ்யாவை சுற்றி நிழல் போர்:**

அமெரிக்க அரசு சோவியத் யூனியனின் கலைப்பை தொடர்ந்து, கோர்பச்சேவ், யெல்ட்சின் பின்னர் புட்டின் மூலமாக ரஷ்யா மீதான காலனி ஆதிக்கத்தை விரும்பியது.

ஆயினும் புட்டினின் எதிர்ப்பால், நேட்டோவும் அமெரிக்காவும் ரஷ்யாவை சுற்றி நிழல் போரை தொடங்கின. நேட்டோ ரஷ்யாவை நோக்கி திட்டமிட்டு முன்னேறி கிழக்கு ஐரோப்பா முழுவதையும் (பால்டிக் நாடுகளுடன்) மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் சில பகுதிகளையும் இணைத்துக் கொண்டு ரஷ்யாவை பகைக்க தொடங்கியது.

அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டாளிகள் தங்கள் சொந்த நலன்களை பின்பற்றி, அதன் வழியை நேட்டோவை பின்பற்றி வருகின்றனர்.

**மத்திய கிழக்கில் நேட்டோ:**

அமெரிக்கா 1990 இல் ஈராக்கை முதன்முதலில் தாக்கியது. 1999 இல், நேட்டோ ஐ.நா ஆணை இல்லாமல் - சர்வதேச சட்டத்தை மீறி - சேர்பியா மீது குண்டுவீசி கொசோவோவை பிரிந்து செல்ல கட்டாயப்படுத்தியது.

2001 ஆம் ஆண்டில், நேட்டோ முதன்முறையாக பரஸ்பர பாதுகாப்பு விதியை செயல்படுத்தி ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. இந்த நாட்டினை அழிவுக்கு உள்ளாக்கி, 20 ஆண்டுகள் நீடித்த இந்தப் போர் தலிபான்களின் வருகையுடன் முடிவுக்கு வந்தது.

ஈராக், லிபியா மற்றும் சிரியாவிற்கு எதிரான அடுத்தடுத்த போர்கள் உத்தியோகபூர்வ நேட்டோ அமைப்பு நாடுகளுக்கு வெளியே நடந்தாலும், அவை பெரும்பாலான நேட்டோ உறுப்பு நாடுகளால் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய கிழக்கில் நடந்த போர்களுக்கு இணையாக, கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னாள் சோவியத் யூனியனின் பல நாடுகளிலும் ரஷ்யாவிற்கு எதிரான பல போர்களை நேட்டோ ஊக்கப்படுத்தியது.

**ரஷ்ய தாயும் உக்ரேனிய சேயும்:**

சோவியத் உடைவின் பின் உலகின் மிக சக்திவாய்ந்த நேட்டோ இராணுவக் கூட்டணி 12ல் இருந்து 32 உறுப்பினர்களாக வளர்ந்தது. கடந்த ஆண்டு, அதன் பாதுகாப்புக்காக 1.3 டிரில்லியன் டொலர்கள் அல்லது

உலக இராணுவச் செலவில் 60 சதவிகிதத்தை நேட்டோ செலவழித்தது. அமெரிக்க இராணுவ வரவுசெலவுத் திட்டம் மட்டும் மொத்தம் 905 பில்லியன் டொலர்களாகும். இது மற்றய நாடுகளை விட அதிகமாகும். மாறாக, சீனா 220 பில்லியன் மற்றும் ரஷ்யா 109 பில்லியன் பாதுகாப்புக்காக மட்டுமே செலவிட்டுள்ளது.

2014 முதல் ரஷ்யாவுடன் போருக்கு திட்டமிட்டு, அமெரிக்கா மேற்கத்திய சார்பு கைப்பாவை ஆட்சியை உக்ரைனில் நிறுவுவதற்கான ஒரு சதியை ஆதரித்தது.

நேட்டோவும் அமெரிக்காவும் தொடர்ச்சியாக உக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்கி வந்தது. இறுதியில் 2022 இல் ரஷ்யா தாயும் சேயுமாக வாழ்ந்த அயலவர்களுடன் தாக்குதலை மேற்கொள்ளத் தூண்டியது.

இதன் பின்னர், ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரேனியர்களை பீரங்கித் தீவனமாகப் பயன்படுத்தி, நூறாயிரக்கணக்கான உக்ரேனிய உயிர்களைப் பலி கொடுத்து வரும் நேட்டோ, அணுவாயுத மோதலாக அதிகரிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதும் உண்மையே

# ஹிக்கடுவ ஆற்றில் நீராடிய மாணவன் நீரில் மூழ்கிச் சாவு



ஹிக்கடுவ ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த 16 வயது பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி சனிகிழமை காணாமற்போன நிலையில், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை சடலமாக கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இந்த மாணவர் தனது 8 நண்பர்களுடன் ஹிக்கடுவ ஆற்றுக்கு நீராடச் சென்றுள்ளார்.

ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த இந்த 9 பேரில் 5 பேர் நீரில் மூழ்கியுள்ளனர்.

அதன் பின்னர், அப்பகுதி மக்கள் நீரில் மூழ்கிய ஐந்து பேரில் 4 பேரை மீட்டதோடு, ஒருவர் காணாமல்போயுள்ளார்.

நீரில் மூழ்கியவாறு காணாமல்போன அந்த மாணவனே நேற்று காலை ஹிக்கடுவ ரயில் பாலத்துக்கு அருகில் உள்ள ஆற்றுப் பகுதியில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மாணவர் கரந்தெனியவில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி பயின்றுவந்தவர் என்றும் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது. (05)

# ஐஸ் போதைப்பொருள்களுடன் மஹியங்கனையில் ஒருவர் கைது

ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் சனிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார் என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய மஹியங்கனை சொரபோர பகுதியை சேர்ந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பகுதியிலிருந்து மஹியங்கனை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு ஐஸ் போதைப்பொருள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, மஹியங்கனை பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 15 கிராம் 800 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 10 ஆயிரம் ஷரூபாய் பணம், கையடக்க தொலைபேசி கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர், சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

அத்தோடு, சந்தேகநபர்மீது போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு அதிகாரி கைது

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் விஷேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 39 காலபெதிகெடிய, நன்னபுராவ, பிபிலை பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

பசறை ஆக்கரத்தன்ன பகுதியில் முகாமிட்டுள்ள விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இந்த பகுதிக்கு சென்று சுற்றிவளைப்பினை மேற்கொண்டபோது மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் லுணுகலை ஹொரேகந்துர எல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டார் எனவும், இந்த நபர் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் சிவில் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றுபவர் என்றும் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும்போது அவர் விடுமுறையில் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் பசறை நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# காயத்திரி கிராமத்தில் 25 வீடுகளை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டு விழா





( வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள காயத்திரி கிராம மக்களுக்கான 25 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர்

தங்கையா கஜேந்திரன் தலைமையில் சனிக்கிழமை காயத்திரி கிராமத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

இவ் வீடுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் வேண்டுகோளுக்கு அமைவாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 1989ஃ1990 காலப்பகுதியில் கல்வி கற்று தற்போது கனடாவில் வசித்துவரும் நிதி வழுங்குனர்கள் இணைந்து விதைகள் கனடா

அமைப்பினர் திருக்கோவில் -4 காயத்திரி கிராமத்தில் உள்ள வீடற்ற 25 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட தீர்மானிக்கபட்டிருந்தது.

இதில் தற்போது 10 வீடுகள் பூரணமாக கட்டி முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் விதைகள் கனடா அமைப்பின் தலைவர் இளங்குமரன் வி கேன் மற்றும் மன்னார் மாவட்ட மாற்று திறனாளிகள் அமைப்பின் இணைத்தலைவர் பி.றோபட் திருக்கோவில் பிரதேச உதவி செயலாளர்திருமதி.எஸ். நிருபா ,உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷாந்த் , கிராம நிருவாக உத்தியோத்தர் என்.கந்தசாமி ,வீட்டுத்திட்ட இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இவ் வீடுகள் அமைப்பதற்காக பிரதேச செயலகத்தால் காணிகளும் இலவசமாக மக்களுக்கு வழுங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனை தொடர்ந்து இவ்வாறு அடிக்கல் நாட்டப்பட்ட வீடுகளில் முதற்கட்டமாக 05 வீடுகள் 2023.07.09 அன்றும் இரண்டாம் கட்ட 05 வீடுகள் 2023.12.21 அன்றும் பூரணமாக கட்டிமுடிக்கப்பட்டு மிகவும் சிறப்பானமுறையில் மக்களுக்கு கையளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மூன்றாம் கட்டமாக 03 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அவ் வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி கடந்தமாதம்(2024 .05.08) ஆரம்பித்தது வைக்கப்பட்டது. இவ்வாறு 2024.05.08 ஆரம்பித்தது வைக்கப்பட்ட வீடுகள் நேற்றைய தினம் முற்றுமுழுதாக முடிக்கபட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இம்மூன்று வீடுகளுக்கான நிதியை விதைகள் கனடா அமைப்பினரின் ஏற்பாட்டிற்கமைவாக அன்பு நெறி அமைப்பினர் வழங்கியிருந்தனர்.

திருக்கோவில்--4 கிராம உத்தியோகத்தர் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் , சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் வீட்டுதிட்ட அமைப்பினர்களான திருமதி.லோ.லோஜிதா,ஆறுமுகம்.பொ.கேதீஸ்வரன் , கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார். (05)

# மூன்றரை மாதக் குழந்தை நிமோனியாவால் இறப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டு மூன்றரை மாத பெண்குழந்தை உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பகுதியைச் சேர்ந்த குழந்தையே உயிரிழந்துள்ளது.

சனிக்கிழமை குழந்தை பால் குடித்த சில மணிநேரங்களில் அசைவின்றி காணப்பட்டுள்ளது. அதன் பின்னர், அந்தக் குழந்தையை போதனா வைத்தியசாலைக்கு பெற்றோர் கொண்டுசென்றபோது, குழந்தை உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழந்தையின் இறப்புக்கு நிமோனியாவே காரணம் என மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர். (05)

# வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய தேடுதலில் 19 பேர் கைது

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட விசேட யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் யுக்திய விசேட நடவடிக்கைக்கு அமைய வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்குப்பட்ட பகுதிகளில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கமைய தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையிலான பெண் பொலிஸார் உள்ளடங்களாக 106 பொலிஸார் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பொலிஸாருக்கு உதவியாக 21 இராணுவ வீரார்கள், மற்றும் விசேட அதிரடிப்படையை சேர்ந்த 4 பேரும் இவ் விசேட நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

இதன் போது, வவுனியா தேக்கவத்தைப் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவர் 2005 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் அதே பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவர் 3580 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற சோதனையின் போது அப்பகுதியை சேர்ந்த இருவர் 100 கிராம் கஞ்சா கலந்த மாவாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், திறந்த பிடியானை இருந்த ஐந்து நபர்களுடன், பிடியானை பிறப்பிக்கப்பட்டிருந்த இரண்டு நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்தும் ஆள் அடையாள ஆவணங்கள் உடைமையில் வைத்திருக்காத 4 பெண்கள் மற்றும் 4 ஆண்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செயப்பட்ட அனைவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05 - 100)



# கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி புதுவருட நிகழ்வும் கௌரவிப்பு





(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய புதுவருட நிகழ்வும், கௌரவிப்பு விழாவும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் அஷ்ஷேய்க் ஏ.எல்.எம்.அஷ்ரஃப் சர்க்கி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மௌலவி எம்.எஸ். எம்.ஜலால்தீன் கபூரி உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வின்போது அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது இஸ்லாமிய புதுவருடத்தினையொட்டி பல்வேறு சொற்பொழிவுகள் இடம்பெற்றதுடன், கலாசார நிகழ்வுகள் பலவும் மேடையேற்றப்பட்டன. துறைசார் பேச்சாளர்கள் மூலம் இஸ்லாமிய புதுவருடத்தின் சிறப்புகள் பற்றியும், இஸ்லாமிய புதுவருடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் விஷேட சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இதேவேளை, கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின்போது இக்கல்லூரியில் இருந்து பகுதி நேரமாக கற்று நூறு சதவீத சித்திகளைப் பெற்ற மாணவர்களும், அம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின்போது கல்லூரியின் முதல்வர் அஷ்ஷேய்க் ஏ.எல்.எம்.அஷ்ரஃப் சர்க்கி மற்றும் நிகழ்வின் அதிதி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் கபூரி ஆகியோரின் சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், தேசிய தொழிற்றகைமை பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஒரு தொகுதி கல்லூரி மாணவர்களுக்கும் இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# பிரண்ட்ஸ் விளையாட்டு கழக மேலங்கி அறிமுக நிகழ்வு

*(கே எ ஹமீட்)*

*அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிகச் சிறப்பாக மிக நீண்டகாலமாக இயங்கிவருகின்ற கடினபந்து விளையாட்டுக் கழகமாக பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகம் திகழ்கின்றது.*

*இக் கழகத்தின் 5 ஆவது மேலங்கி அறிமுக நிகழ்வு கழகத்தின் தலைவர் பீ.எம்.றிம்சான் தலைமையில் வெள்ளிக்கிழமை அட்டாளைச்சேனை பீச் ஹவுசில் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக ஆர்வலரும், முன்னாள் வங்கி உத்தியோகத்தருமான அல்ஹாஜ் ஏ.சி.எம். சமீர் கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் இதில் அதிபரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஐ.எம்.றியாஸ் , அரசியல் செயற்பாட்டாளரும், ஊடகவியலாளருமான றிசாத் ஏ காதர் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவானும், சமூக ஆர்வலருமான கே.அப்துல் ஹமீட் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்திருந்தனர்.*

*மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த சமூக ஆர்வலரும், முன்னாள் வங்கி உத்தியோகத்தருமான அல்ஹாஜ் ஏ.சி.எம். சமீர் கழகத்தால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*

# எரிந்த நிலையில் சடலம் தம்பலகாமத்தில் மீட்பு



(எச் எம் ஹலால்தீன்)

திருகோணாமலை மாவட்டம் தம்பலகாமம் பொலீஸ் பிரிவுக்குப்பட்ட கூட்டாம்புளி எனும் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீகப்பட்ட சடலம் திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயசீலன் வயது 53 என தம்பலகாமம் பொலீஸார் தெரிவித்தனர்.

விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்ற வேளையில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதை அடுத்து தம்பலகமம் பொலீஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து அவ்விடத்துக்கு வந்த பொலீஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

அடையாளம் காணப்படாத நிலையில் உடல் எரிந்த நிலையில் காணப்பட்டது எனினும் அவருடைய தேசிய அடையாள அட்டை அவ்விடத்தில் காணப்பட்டதனால் யார் என்பதை பொலீஸார் அடையாளம் கண்டு கொண்டனர்.

இவர் பிரான்ஸ் நாட்டில் 17 வருடங்களுக்குப் பின் கடந்த மாதம் இவர் இலங்கை வந்துள்ளார்.

இலங்கை வந்தவுடன் தனது மகளுக்கு திருமணம் முடித்து கொடுத்துள்ளார். மகளின் திருமணம் முடித்து பத்து நாள்கள் ஆகின்றன எனக் கூறப்படுகின்றது.

எரிந்த நிலையில் காணப்பட்ட சடலத்தை கநதளாய் பதில் நீதிமான் சென்று பார்வையிட்ட பின்னர் அச்சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனை அடுத்து சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகமம் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (05)

# கல்முனை சாரண ஆசிரியர்களுக்கு ஆணைப் பத்திரங்கள் வழங்கல்



(எம். எப். றிபாஸ்)

கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான ஆணை பத்திரம் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் இடம்பெற்றது. மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் பிரதம அதிதியாகவும், ஆலோசகர்களான முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் யூ.எல்.எம். ஹாசிம், முன்னாள் மாவட்ட ஆணையாளர் எஸ். ரவீந்திரன் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்களும் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

நான்கு கல்வி வலயங்களிலுமிருந்தும் சுமார் இருபதுக்கு மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான சாரண ஆணைப்பத்திரங்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# தமிழ் பொது வேட்பாளரின் தேவை குறித்து வவுனியாவில் தெளிவூட்டல் கருத்தமர்வு

சமகால அரசியலும், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா, வாடி வீட்டில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை)இடம பெற்றிருந்தது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோரால் சமகால அரசியல் தொடர்பாகவும், தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் உரையாற்றியிருந்தனர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சபை அமைச்சர் சிவநேசன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜெகதீஸ்வரன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05 -100)

# கதிர்காமம் , உகந்தை மற்றும் தாந்தாவில் ஆலய ஆடி வேல் தீர்த்தோற்சவ நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்திபெற்ற கதிர்காமம் உகந்தைமலை மற்றும் தாந்தாமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம் இன்று (திங்கட்கிழமை) காலை நடைபெறவுள்ளன. பல லட்சக்கணக்கான பக்தர்கள் தீர்த்தமாட இப் பழம்பெரும் ஆலயங்களுக்கு சாரி சாரியாகச் செல்கின்றனர்.

பெரும்பாலும் இப்பழம் பெரும் ஆலயங்களின் ஆடிவேல் விழா உற்சவம் ஒரே காலத்தில் நடைபெறுவதுண்டு

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயம் மற்றும் உகந்தைமலை முருகன் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜ/லை மாதம் 06ஆம் இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது தெரிந்ததே.

# தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு

## யாழ். நகரில் நேற்று நடந்தது



தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கமும் கலந்துகொண்டு உரையாற்றினர். மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன், யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் உட்பட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# ஒப்படை சமர்ப்பிக்காதமைக்கு ஆசிரியர் தாக்கினார் என மாணவன் முறைப்பாடு

ஒப்படை சமர்ப்பிக்கத் தவறியதால் தன்னை ஆசிரியர் மூர்க்கத்தனமாக தாக்கினார் என பாடசாலை மாணவன் ஒருவனால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனே முறைப்பாடு செய்துள்ளார் என கூறப்படுகிறது. பாடம் ஒன்றுக்கான ஒப்படையை சமர்ப்பிக்க தவறியமையால் ஆசிரியர் தன்னை தாக்கியதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளில் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# இளைஞர் விவசாயத் தொழில் முனைவோர் கிராமம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குறப்பட்ட கண்ணகைபுரம் பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். குறித்த நிகழ்வில் மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ்-முரளீதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர், கிராம சேவையாளர்,கிராம மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டன. குறித்த திட்டம் மூலம் குறித்த கிராமத்திற்கு 10 மில்லியன் ஷரூபா அபிவிருத்திக்கு கிடைக்கப்பெறவுள்ளது.

தொடர்ந்து அமைச்சர் ஊடகங்களுக்கு இந்திய விஜயம் தொடர்பாகவும், திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனவும் கருத்து தெரிவித்தார். 113




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2024இல் வெளியிடப்பெற்றது